## சுருக்கம்

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நலம்- 2021-2022-ஆம் ஆண்டிற்கான புதிய அறிவிப்புகள் ஆண்டு தோறும் மாவட்ட அளவில் சிறப்பாக செயல்படும் மூன்று விடுதிகளை தேர்வு செய்து பரிசுகள் வழங்குதல் - நிர்வாக ஒப்பளிப்பு - ஆணை வெளியிடப்படுகிறது.

---

**பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல (சிநஆபி 2) த் துறை**

அரசாணை (நிலை) எண். 76

நாள் 25.11.2021
திருவள்ளுவர் ஆண்டு 2052
பிலவ, கார்த்திகை 9

படிக்கப்பட்டது :

பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநரின் கடித எண். அ2/ 5502/2021, நாள் 17.09.2021.

*******

**ஆணை:-**

2021-2022-ஆம் ஆண்டிற்கான இத்துறையின் மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் அவர்கள் பின்வரும் அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்கள்.

> "மாநிலம் முழுவதும் செயல்படும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர்/ சீர்மரபினர் மற்றும் கள்ளர் சீரமைப்பு விடுதிகள் சிறப்பாக செயல்படுவதை ஊக்கப்படுத்தும் வகையில், ஆண்டுதோறும் மாவட்ட அளவில் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர்/ சீர்மரபினர் மற்றும் கள்ளர் சீரமைப்பு விடுதிகளில் சிறந்த 3 விடுதிகளை தேர்வு செய்து ரூபாய் ஏழு இலட்சத்து எண்பதாயிரம் செலவில் பரிசுகள் வழங்கப்படும்."

2. மேலே படிக்கப்பட்ட கடிதத்தில் மாநிலம் முழுவதும் செயல்படும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் / சீர்மரபினர், சிறுபான்மையினர் மற்றும் கள்ளர் சீரமைப்பு விடுதிகள் சிறப்பாக செயல்படுவதை ஊக்கப்படுத்தும் வகையில், ஆண்டுதோறும் மாவட்ட அளவில் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் / சீர்மரபினர், சிறுபான்மையினர் மற்றும் கள்ளர் சீரமைப்பு விடுதிகளில் சிறந்த 3 விடுதிகளை தேர்வு செய்து நினைவுப்பரிசுகள் வழங்கிட அரசுக்கு பரிந்துரைத்துள்ளார். விடுதிகளை நன்கு நிர்வகிக்கும் காப்பாளர்/ காப்பாளினிகளை ஊக்கப்படுத்தும் விதமாக, அவர்களுக்கு கீழ்க்காணுமாறு பரிசுத்தொகைகள் வழங்கிடலாம் என பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநர் தெரிவித்துள்ளார்.

I) மாவட்ட அளவில் ஆண்டுதோறும் சிறந்த 3 விடுதிகளைத் தேர்வு செய்து நினைவுப் பரிசுகள் வழங்குதல் தொடர்பாக ஏற்படும் செலவினவிபரம்

<u>நினைவுப் பரிசுகள் வழங்க ஏற்படும் செலவினம் =</u>ரூ.2000/-

II) சிறந்த விடுதிகளை நிர்வகிக்கும் காப்பாளர், காப்பாளினிகளுக்கு வழங்கப்படும் பரிசுத் தொகைகள் தொடர்பான விபரம்

| முதல் இடம் பெறும் விடுதி | இரண்டாம் இடம் பெறும் விடுதி | மூன்றாம் இடம் பெறும் விடுதி | மொத்தம் |
|---|---|---|---|
| ரூ.10,000/- | ரூ.5,000/- | ரூ.3,000/- | ரூ.18,000/- |

மொத்த மாவட்டங்கள் -39 (39 x 18000) = ரூ. 7,02,000
(38 மாவட்டங்கள் (ம) கள்ளர் சீரமைப்பு)

கேடயம், சான்றிதழ் மற்றும்
இதர செலவினங்கள் (39x 2000) = <u>ரூ. 78,000</u>
மொத்தம் <u>ரூ. 7,80,000</u>

3. பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநரின் பரிந்துரையை நன்கு கவனமுடன் பரிசீலித்து, அதனை ஏற்று 2021-2022 - ஆம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் மாவட்ட அளவில் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் / சீர்மரபினர், சிறுபான்மையினர் மற்றும் கள்ளர் சீரமைப்பு விடுதிகளில், மாவட்ட அளவில்

சிறப்பாக செயல்படும் மூன்று விடுதிகளை தேர்வு செய்து ரூ.7,80,000/- (ரூபாய் ஏழு இலட்சத்து எண்பதாயிரம் மட்டும்) செலவில் பரிசுகள் வழங்க நிர்வாக ஒப்புதல் அளித்து அரசு ஆணையிடுகிறது. சிறப்பாக செயல்படும் விடுதிகள் தெரிவு செய்யப்பட்ட பின்னர் நிதி ஒப்பளிப்பு கோரி கருத்துருவினை அரசுக்கு அனுப்புமாறு பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

4. பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர்/ சீர்மரபினர், சிறுபான்மையினர் மற்றும் கள்ளர் சீரமைப்பு விடுதிகளில் பின்வரும் இனங்களின் அடிப்படையில் தேர்வு செய்து பரிசுகள் வழங்கப்படும்.

i) விடுதி மாணவ, மாணவியர்கள் அரசுப் பொதுத் தேர்வுகளில் அதிக மதிப்பெண் பெறுதல்.
ii) மாணவ, மாணவியர்களுக்கு வழங்கப்படும் உணவு தரம், அளவு குறித்து எந்தவொரு புகாரும் வரப்பெறாமை.
iii) காப்பாளர்கள் கல்லூரி முதல்வர்களுடன் கலந்தாலோசித்து விடுதி மாணவர்களின் கல்வித்தரத்தை உயர்த்துவதற்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்.
iv) விடுதி மாணவ, மாணவியர்களின் உடல் நலம் பேணுதல்.
v) விடுதிகளின் சுற்றுப்புறம், விடுதியை சுகாரதாரமாகப் பேணுதல்.
vi) விடுதியை நன்முறையில் பராமரித்தல்.
vii) விடுதிகளில் தோட்டம் அமைத்து சிறந்த முறையில் பராமரித்தல்.
viii) விடுதி மாணவ/மாணவியர்களின் கல்வி மேம்பாட்டிற்காக காப்பாளர்/காப்பாளினிகளால் முன்னெடுக்கப்பட்ட புதிய முயற்சிகள் உள்ளிட்ட இதர இனங்கள்.

5. பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நல விடுதிகளை நன்முறையில் நிர்வகிக்கும் காப்பாளர்/ காப்பாளினிகளை தேர்வு செய்யும் பணியினை அந்தந்த மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்களாலும், கள்ளர் சீரமைப்பு விடுதிகளை நன்முறையில் நிர்வகிக்கும் காப்பாளர்/ காப்பாளினிகளை தேர்வு செய்யும் பணியினை இணை இயக்குநர், கள்ளர் சீரமைப்பு அவர்களாலும் மேற்கொள்ளப்பட வேண்டும். அதன் அறிக்கையினை முறையே பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநர் மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர் ஆகியோரின்

ஒப்புதலுக்கு அனுப்பப்பட வேண்டும். இந்நேர்வில் தொடர்புடைய இயக்குநர்/ ஆணையரின் முடிவே இறுதியானது.

6. மேலே பத்தி 3ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்றுவைக்கப்படும்:

"2225 – ஆதிதிராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் - 03 – பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 227 – கல்வி – மாநிலச் செலவினங்கள் – AA – பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மாணவர் இல்லங்கள் – 359 –பரிசுகளும் வெகுமதிகளும் - 01- பரிசுகளும் வெகுமதிகளும்"

(IFHRMS DPC 2225 – 03 – 277– AA – 35901)

7. இவ்வரசாணை நிதித்துறையின் ஒப்புதலை அதன் அலுவல் சார்பற்ற எண் 51789/நிதி (பி,மி.பி (ம) சிந) /2021, நாள் 22.11.2021- இல் பெற்று வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

ஆ. கார்த்திக்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
இயக்குநர்,
பிற்படுத்தப்பட்டோர் நலன், சென்னை-5.
ஆணையர்,
மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன், சென்னை-5.
இயக்குநர்,
சிறுபான்மையினர் நலன், சென்னை-5.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.
அனைத்து மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்கள்.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை-8.
மாநில கணக்காயர், சென்னை-18.

நகல்:-
நிதி (பி,மிபி(ம)சிந/ வ.செ.பொ.II)த் துறை, சென்னை-9
மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நல அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9.

அரசு முதன்மைச் செயலாளரின் முதன்மை தனிச் செயலர்,
பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நலத்துறை, சென்னை-9.
அரசு சிறப்புச் செயலாளரின் நேர்முக உதவியாளர்,
பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நலத்துறை, சென்னை-9
இருப்புக் கோப்பு / உபரி நகல்.

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

25/11/21

**பிரிவு அலுவலர்**